**டிசம்பர் – 30**

# TNPSC துளிகள்

- இரண்டு முறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற இந்தியாவைச் சேர்ந்த P.V. சிந்து, பேட்மிண்டன் உலகக் கூட்டமைப்பு (BWF) தடகள ஆணையத்தின் 2026–2029 ஆம் கால கட்டத்திற்கான தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ஒடிசா பிரிவினைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான அனு கார்க், 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் ஒடிசாவின் முதல் பெண் தலைமைச் செயலாளராக பதவியேற்க உள்ளார்.
- அதானி விமான நிலையங்களால் உருவாக்கப்பட்ட புதிய பசுமை விமான நிலையமான நவி மும்பை சர்வதேச விமான நிலையம் (NMIA) வணிக ரீதியான விமான சேவை நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது.
- ஜோஹோ நிறுவனத்தின் ஆதரவு பெற்ற புத்தொழில் நிறுவனமான VoxelGrids, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் காந்த அதிர்வு அலை வரைவு (MRI) ஸ்கேனர் இயந்திரத்தினை உருவாக்கியுள்ளது.
- இந்தியக் கடலோரக் காவல்படை (ICG) ஆனது, மும்பை கடற்கரையில் எண்ணெய் கசிவுத் தணிப்பு நடவடிக்கைக்கான தயார்நிலையை பரிசோதிக்க பிராந்திய அளவிலான மாசு எதிர்ப்புப் பயிற்சியை (RPREX-2025) நடத்தியது.
- சீனா சின்ஜியாங் உய்குர் தன்னாட்சிப் பகுதியில், உலகின் மிகவும் நீளமான அதி விரைவுச் சாலை சுரங்கப்பாதையாக அமைந்த 22.13 கிமீ நீளமுள்ள தியான்ஷான் ஷெங்லி சுரங்கப்பாதையைத் திறந்துள்ளது.
    - இது வடக்கு மற்றும் தெற்கு ஜின்ஜியாங்கைப் பிரிக்கும் தியான்ஷான் மலைத் தொடரின் வழியாக செல்கிறது.
- பரம் ருத்ரா மீக்கணினி ஆனது பாட்னாவின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் திறக்கப்பட்டது.
    - இது தேசிய மீக்கணினித் திட்டத்தின் (NSM) கீழ் பீகாரில் உள்ள முதல் மீக்கணினி மையம் ஆகும்.
- அசாமின் ஜோர்ஹாட்டைச் சேர்ந்த ஐஷி பிரிஷா போரா, நிலைத்தன்மை மற்றும் கழிவு குறைப்பை ஊக்குவிக்கும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் அவரது பணிக்காக 2025 ஆம் ஆண்டு பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய பால் புரஸ்கார் விருதைப் பெற்றார்.
    - முன்னதாக அவர் 2022 ஆம் ஆண்டில் INSPIRE MANAK (Inspiration in Science Pursuit for Inspired Research - Million Minds Augmenting National Aspirations and Knowledge) மாநில விருதை வென்றார்.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் முதல் தேசிய ஆயுதத் தரவுத் தளம்

- உள்நாட்டுப் பாதுகாப்பு அமைப்புகளை வலுப்படுத்துவதற்கு என்று மத்திய அரசு இந்தியாவின் முதல் தேசிய ஆயுதத் தரவுத் தளத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்த தரவுத் தளத்திற்குத் தொலைந்து போன, கொள்ளையடிக்கப்பட்ட மற்றும் மீட்கப் பட்ட துப்பாக்கி (LLRF) தரவுத் தளம் என்று பெயரிடப்பட்டுள்ளது என்பதோடு இது காணாமல் போன ஆயுதங்களைக் கண்காணிப்பதில் கவனம் செலுத்துகிறது.

- இது 2025 ஆம் ஆண்டு தீவிரவாத எதிர்ப்பு மாநாட்டின் போது அதிகாரப்பூர்வமாக தொடங்கப் பட்டது.
- இந்தத் தரவுத் தளம் உள்துறை அமைச்சகத்தின் (MHA) கீழ் உள்ள தேசியப் புலனாய்வு முகமையினால் (NIA) உருவாக்கப்பட்டு வழங்கப்படுகிறது.
- இது மாநிலக் காவல்துறை மற்றும் மத்திய ஆயுத காவல் படைகளுக்கு (CAPF) சொந்தமான, அரசுக்குச் சொந்தமான துப்பாக்கிகளின் விவரங்களைக் கொண்டு உள்ளது.
- இந்த அமைப்பு அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள காவல்துறை, துணை இராணுவப் படைகள் மற்றும் விசாரணை முகமைகளிடையே நிகழ்நேரத் தரவுப் பகிர்வை அனுமதிக்கிறது.




## இந்தியாவில் வெறிநாய்க் கடி நோய்ப் பாதிப்பு நெருக்கடி




- உலகில் வெறிநாய்க் கடி நோய்ப் பாதிப்பினால் ஏற்பட்ட உயிரிழப்புகளில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு இந்தியாவிற்குள் பதிவாகிறது.
- இதன் விளைவாக, தடுக்கக்கூடிய இந்த நோயால் அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புகள் ஏற்படும் நாடாக இது உள்ளது.
- வெறிநாய்க் கடி நோய் என்பது மூளை மற்றும் முதுகுத் தண்டு வரை நரம்புகள்

வழியாக பயணிக்கும் ஒரு நரம்பு நாட்ட/நியூரோட்ரோபிக் வைரஸால் ஏற்படுகிறது.

- இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 20,000 பேர் இந்த வெறிநாய்க் கடி நோய்ப் பாதிப்பினால் இறக்கின்றனர் என்பதோடு இதனால் பாதிக்கப்பட்டப் பெரும்பாலான மக்கள் கிராமப் புறங்களிலும் மிகவும் குறைந்த வருமானம் உள்ள சமூகங்களிலும் வாழ்கின்றனர்.
- 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அதிக ஆபத்தில் உள்ளனர் என்பதோடு சுதந்திரமாக சுற்றித் திரியும் நாய்கள், 80 மில்லியன் ஆக உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் ஆண்டுதோறும் சுமார் 20 மில்லியன் பேரை அவை கடிக்கச் செய்கின்றன / அல்லது கடிகளுக்கு அவை காரணமாகின்றன.
- இந்தியா ஒவ்வோர் ஆண்டும் சுமார் 50 மில்லியன் வெறிநாய்க் கடி நோய் எதிர்ப்பு தடுப்பூசிகளை (ARV) உற்பத்தி செய்கிறது, ஆனால் 60 மில்லியன் தடுப்பூசிகளின் தேவை உள்ளது என்பதோடு இது மருத்துவமனைகளில் பற்றாக்குறை மற்றும் சிகிச்சை தாமதங்களுக்கு வழி வகுக்கிறது.

## குடியரசுத் தலைவரின் நீர்மூழ்கிக் கப்பல் பயணம்




- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் கர்நாடகாவின் கார்வார் துறைமுகத்திலிருந்து ஒரு நீர்மூழ்கிக் கப்பல் பயணத்தை மேற்கொண்டார்.
- A.P.J. அப்துல் கலாமுக்குப் பிறகு நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்த இரண்டாவது இந்தியக் குடியரசுத் தலைவர் என்ற பெருமையை இவர் பெற்றார்.
- கார்வார் துறைமுகம் மேற்குக் கடற்கரையில் இந்தியாவின் மிகவும் உத்தி சார் கடற்படைத் தளங்களில் ஒன்றாகும்.
- முர்மு அவர்கள் ரஃபேல் மற்றும் சுகோய்-30 MKI போர் விமானங்களிலும் பயணம் மேற்கொண்டுள்ளார் என்பதோடு இது ஆயுதப் படைகளுடனான குடியரசுத் தலைவரின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஈடுபாடுகளைக் குறிக்கிறது.

- அவர் ஒல் சிக்கி நூற்றாண்டு விழாவிலும் ஜார்க்கண்டில் நடைபெற்ற ஜாம்ஷெட்பூரின் தேசியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் 15வது பட்டமளிப்பு விழாவிலும் கலந்து கொண்டார்.

## 3 புதிய விமான நிறுவனங்களுக்கு ஒப்புதல்




- சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் ஆனது ஷாங்க் ஏர், அல் ஹிந்த் ஏர் மற்றும் ஃப்ளைஎக்ஸ்பிரஸ் ஆகியவற்றுக்கு தடையில்லாச் சான்றிதழ்களை (NOC) வழங்கியது.
- உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள ஷாங்க் ஏர், நொய்டா சர்வதேச விமான நிலையத்திலிருந்து தன் சேவைகளை வழங்கி, நிலை 1 மற்றும் நிலை 2 நகரங்களை இணைக்கத் திட்டமிட்டுள்ளது.
- கேரளாவில் உள்ள அல் ஹிந்த் ஏர், ATR 72-600 விமானங்களுடன் பிராந்தியப் பயணிகள் விமான நிறுவனமாகத் தொடங்கவும், பின்னர் சர்வதேச அளவில் விரிவுபடுத்தவும் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- தெலுங்கானாவில் உள்ள ஃப்ளைஎக்ஸ்பிரஸ், நிலை 2 மற்றும் நிலை 3 நகரங்களை இணைப்பதில் கவனம் செலுத்துகிறது மற்றும் UDAN (உதே தேஷ் கா ஆம் நாக்ரிக்) போன்ற அரசு திட்டங்களையும் பயன்படுத்துகிறது.
- செயல்பாட்டு மற்றும் ஒழுங்குமுறை இணக்கத்திற்காக விமான நிறுவனங்கள் பொது விமானப் போக்குவரத்து அமைச்சகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டன.
- இந்த முன்னெடுப்பு ஆனது, பிராந்திய இணைப்பை அதிகரிப்பதையும் உள்நாட்டு விமானப் பயணத்தை மலிவு விலையில் வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.


## தலைமைச் செயலாளர்களின் தேசிய மாநாடு

- தலைமைச் செயலாளர்களின் ஐந்தாவது தேசிய மாநாடு ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.

- இந்த மாநாட்டிற்கு இந்தியப் பிரதமர் தலைமை தாங்கினார்.
- தேசிய மேம்பாட்டு முன்னுரிமைகள் குறித்த கட்டமைக்கப்பட்ட பேச்சுவார்த்தையின் மூலம் மத்திய-மாநில கூட்டாண்மையை நன்கு வலுப்படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.
- "Human Capital for Viksit Bharat" என்பது இந்த மாநாட்டின் கருத்துரு ஆகும்.
- இந்த மாநாடு ஆனது, ஆரம்பகாலக் குழந்தைப் பருவக் கல்வி, பள்ளிப்படிப்பு, திறன் மேம்பாடு, உயர்கல்வி, விளையாட்டு மற்றும் பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.
- மாநிலங்களில் கட்டுப்பாடு நீக்கம், நிர்வாகத்தில் தொழில்நுட்பம், சீர்மிகு விநியோகத் தொடர்களுக்கான AgriStack, சுற்றுலா, ஆத்மநிர்பர் பாரத் (தற்சார்புடைய இந்தியா) மற்றும் சுதேசி, மற்றும் இடதுசாரி தீவிரவாதத்திற்குப் பிந்தைய எதிர்காலத்திற்கான உத்திகள் குறித்து ஆறு சிறப்பு அமர்வுகள் நடத்தப்பட்டன.




## டிஜிட்டல் ஆளுகை சீர்திருத்தங்கள்




- 2025 ஆம் ஆண்டு நல்லாட்சி தினத்தன்று மத்தியப் பணியாளர், பொதுமக்கள் குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் ஐந்து டிஜிட்டல் ஆளுகை சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார்.
- இந்தச் சீர்திருத்தங்கள் அரசு அலுவலகங்களில் செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட சேவை வழங்கலை மேம்படுத்துவதை

நோக்கமாகக் கொண்டுள்ளன.

- அரசு ஆட்சேர்ப்பு விதிகளைத் தானியக்கமாக்க AI (செயற்கை நுண்ணறிவு) மூலம் இயங்கும் ஆட்சேர்ப்பு விதிகள் உருவாக்க கருவி அறிமுகப் படுத்தப்பட்டது.
- ஊழியர் மனிதவளப் பணிகளை டிஜிட்டல் முறையில் நிர்வகிக்க eHRMS (பணியாளர் மனிதவள மேலாண்மை அமைப்பு) 2.0 கைபேசி செயலி தொடங்கப்பட்டது.
- அரசு ஊழியர்களுக்கு அதிக அளவிலான இயங்கலை வழி கற்றல் மூலங்களை வழங்குவதற்காக iGOT (ஒருங்கிணைந்த அரசு இயங்கலைப் பயிற்சி) கர்மயோகி வலை தளம் மேம்படுத்தப்பட்டது.
- அரசு ஊழியர்களுக்கான ஊடாடும் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சியை ஆதரிப்பதற்காக கர்மயோகி டிஜிட்டல் கற்றல் ஆய்வகம் 2.0 தொடங்கப்பட்டது.
- முன்னாள் இராணுவ வீரர்களுக்கான இடஒதுக்கீட்டுக் கொள்கை மற்றும் செயல் படுத்துதலை வழி நடத்துவதற்காக முன்னாள் இராணுவ வீரர்களுக்கான இட ஒதுக்கீடு குறித்த தொகுப்பு (ESM) வெளியிடப்பட்டது.

## இந்தியாவில் குழந்தைத் திருமணம்




- ஐக்கிய நாடுகளின் நிலையான மேம்பாட்டு இலக்குகளின் (SDG) கீழ் 2030 ஆம் ஆண்டிற்குள் குழந்தைத் திருமணத்தை ஒழிப்பதற்கு இந்தியா உறுதியளித்துள்ளது.
- அரசாங்கம் ஆனது பால் விவாஹ் முக்த் பாரத் அபியான் பிரச்சாரத்தைத் தொடங்கி, அதன் முதலாமாண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், குழந்தைத் திருமணத்திற்கு எதிரான 100 நாள் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை மேற்கொண்டது.

- தேசிய குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பு (NFHS) தரவுகள், 2005-06 ஆம் ஆண்டில் 47.4% ஆக இருந்த 18 முதல் 29 வயதுடைய பெண்களிடையே குழந்தை திருமணம் ஆனது, 2019-21 ஆம் ஆண்டில் 23.3% ஆகக் குறைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது.
- மேற்கு வங்காளம், பீகார் மற்றும் திரிபுராவில் குழந்தைத் திருமணங்கள் மிக அதிக விகிதத்தில் பதிவாகியுள்ள அதே நேரத்தில் ஜார்க்கண்ட், ஆந்திரப் பிரதேசம், அசாம், தெலுங்கானா, மத்தியப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தானிலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் அவை பதிவாகியுள்ளன.
- ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களில் இருந்து 40% பெண்கள் 18 வயதுக்கு முன்பே திருமணம் செய்து கொள்கிறார்கள் என்ற நிலையில் பணக்காரக் குடும்பங்களில் இருந்து 8% பேர் மட்டுமே அந்த வயதிற்குள் திருமணம் செய்து கொள்கிறார்கள்.
- கல்வி பெறாத பெண்களில் சுமார் 48% பேர் வயது வரும் முன்பே திருமணம் செய்து கொள்கிறார்கள் என்ற நிலையில் கல்வி பெற்றப் பெண்களில் சுமார் 4% பேர் மட்டுமே அவ்வாறு திருமணங்களை செய்து கொள்கின்றனர்.
- இதைத் தடுப்பதற்காக 2006 ஆம் ஆண்டில் குழந்தை திருமணத் தடுப்புச் சட்டம் இயற்றப் பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## சோமாலிலாந்து குடியரசின் அங்கீகாரம்





- சோமாலிலாந்து குடியரசை ஒரு சுதந்திரமான மற்றும் இறையாண்மை கொண்ட நாடாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்த முதல் நாடு இஸ்ரேல் ஆகும்.
- சோமாலிலாந்து என்பது ஆப்பிரிக்காவின் முனைப் பகுதியில் உள்ள ஒரு சுயமாக

அறிவிக்கப்பட்ட நாடாகும் என்பதோடு இது 1991 ஆம் ஆண்டு முதல் சோமாலியாவின் கட்டுப்பாடு இல்லாமல் தனித்து செயல்பட்டு வருகிறது.

- இஸ்ரேலுக்கும் சோமாலிலாந்துக்கும் இடையிலான பரஸ்பர அங்கீகாரத்தின் கூட்டு அறிவிப்பின் மூலம் இந்த அங்கீகாரம் முறைப்படுத்தப்பட்டது.
- வேளாண்மை, சுகாதாரம், தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரத் துறைகளில் சோமாலிலாந்துடன் கூட்டுறவினை மேற்கொள்வதற்கான திட்டங்களை இஸ்ரேல் அறிவித்தது.
- ஆனால் சோமாலியா நாடானது இந்த சோமாலிலாந்து அங்கீகாரத்தை நிராகரித்து, சோமாலிலாந்து அதன் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டப் பிரதேசத்தின் ஒரு பகுதியாகவே உள்ளது என்று கூறியது.
- ஆப்பிரிக்க ஒன்றியம் (AU) மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) சோமாலியாவின் ஒற்றுமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கான ஆதரவை மீண்டும் உறுதிப் படுத்தின.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## மிதமான மைட்டோகாண்ட்ரியல் இணைப்பு நீக்கிகள்





- செல்கள் வெப்பமாக வெளியிட்டு அதிக ஆற்றலை எரிப்பதன் மூலம் உடல் பருமனுக்கு சிகிச்சையளிக்க உதவச் செய்யும் வகையில் அறிவியலாளர்கள் "மிதமான மைட்டோ காண்ட்ரியல் இணைப்பு நீக்கிகளை" ஆராய்ந்து வருகின்றனர்.
- மைட்டோகாண்ட்ரியல் என்பது உணவை அடினோசின் ட்ரைபாஸ்பேட் (ATP) எனப்

படும் வேதியியல் ஆற்றலாக மாற்றும் செல் கட்டமைப்புகள் ஆகும் என்பதோடு இது தசைகள், மூளை மற்றும் உறுப்புகளுக்கு சக்தி அளிக்கிறது.

- உடல் பருமனில், மக்கள் அவர்களின் உடல் எரிப்பதை விட அதிக கலோரிகளை உட்கொள்கிறார்கள், எனவே செல்களில் ஆற்றல் பயன்பாடு அதிகரிப்பது எடையைக் குறைக்கலாம்.
- இதற்கு முந்தைய மைட்டோகாண்ட்ரியல் இணைப்பு நீக்கிகள் மிகவும் வலுவாகவும் கட்டுப்பாடற்றதாகவும் இருந்ததால் அதிக வெப்பமடைதல், உறுப்புச் செயலிழப்புகள் மற்றும் மரணத்தை ஏற்படுத்தியதால் அவை ஆபத்தானவையாகும்.
- புதிய "மிதமான" இணைப்பு நீக்கிகள் ஆற்றல் பயன்பாட்டை மெதுவாக அதிகரிக்கின்றன என்ற நிலையில், இதனால் கூடுதல் கலோரிகள் ஒரு பாதுகாப்பான வகையில் எரிக்கப் படுகின்றன மற்றும் செல்களில் ஆக்ஸிஜனேற்ற அழுத்தத்தை அவை குறைக்கின்றன.
- மிதமான இணைப்பு நீக்கிகள் வயதாவதைத் தடுக்கவும், இன்சுலின் எதிர்ப்பு மற்றும் டிமென்ஷியா போன்ற நரம்புச் சிதைவு நோய்களைத் தடுக்கவும் உதவும்.

# மாநிலச் செய்திகள்

## வரலாற்றுக்கு முந்தைய காலத்தினைச் சேர்ந்த உலகின் மிகப்பெரிய பாம்பு




- குஜராத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதைபடிவ எச்சங்கள், ஆரம்பகால ஈசீன் சகாப்தத்தில் (சுமார் 47 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு) வரலாற்றுக்கு முந்தைய காலத்தினைச் சேர்ந்த பெரிய பாம்பு இருந்ததைக் குறிக்கின்றன.

- பூமியின் வரலாற்றில் வெப்பமான புவியியல் காலங்களில் ஒன்றான ஈசீனின் போது உருவாக்கப்பட்ட வண்டல் படிவுப் பாறை அடுக்குகளில் இந்தப் புதைபடிவங்கள் கண்டெடுக்கப் பட்டன.
- அறிவியல் பகுப்பாய்வு ஆனது இந்தப் பாம்பை மேட்சோயிட் குழுவில் (இராட்சத பாம்புகளின் அழிந்து போன குடும்பம்) சேர்க்கிறது.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது அதன் நீளம் மட்டுமல்ல, உடல் பருமன் மற்றும் வலிமை குறித்து விவாதிப்பதுடன் உலகின் மிகப்பெரிய பாம்பு பற்றிய விவாதத்தை மறு வரையறை செய்யலாம்.

## ஒடிசா கிராமங்களுக்கான TRRP அங்கீகாரம்




- ஒடிசாவில் உள்ள இருபத்தி நான்கு கடலோரக் கிராமங்கள் யுனெஸ்கோ அமைப்பினால் சுனாமி நடவடிக்கைகளுக்கான தயார் நிலை அங்கீகாரத் திட்டத்தின் (TRRP) கீழ் சுனாமிக்கு தயார் நிலையில் உள்ளவை ஆக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- TRRP என்பது கடலோரப் பேரிடர் தயார்நிலையை மேம்படுத்த யுனெஸ்கோவின் அரசுகளுக்கிடையேயான கடல்சார் ஆணையத்தால் (IOC) உருவாக்கப்பட்ட ஒரு தன்னார்வ, சமூக அடிப்படையிலான திட்டமாகும்.
- ஆபத்து விழிப்புணர்வு, வெளியேற்றத் திட்டமிடல், எச்சரிக்கை அமைப்புகள் மற்றும் சமூகப் பயிற்சிகளை மதிப்பிடுவதற்கு இந்தத் திட்டம் பன்னிரண்டு தயார்நிலை குறிகாட்டிகளைப் பயன்படுத்துகிறது.
- புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தியாவின் தேசிய சுனாமி தயார்நிலை அங்கீகார வாரியம் (NTRB), இந்திய சுனாமி முன் எச்சரிக்கை மையம் (ITEWC) மற்றும் தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் (NDMA) ஆதரவுடன் TRRP திட்டத்தினைச் செயல்படுத்துகிறது.
- இந்த அங்கீகாரம் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கத் தக்கது என்பதோடு மேலும் இந்தக் கிராமங்கள் சுனாமி அபாயங்கள், வெளியேற்ற வரைபடங்களைப் பொது மக்களுக்குக் காட்சிப் படுத்துதல், 24 மணி நேர எச்சரிக்கை அமைப்புகள் மற்றும் மாதிரிப் பயிற்சிகளில் பங்கேற்கச் செய்தல் பற்றிய அதிகபட்ச விழிப்பு உணர்வைப் பேண வேண்டும்.

# இதரச் செய்திகள்

## இந்தியாவின் முதல் அகர்பத்தி தரநிலை

- இந்திய தரநிலைகள் வாரியம் (BIS) ஆனது, அதன் உற்பத்தி மற்றும் விற்பனையை ஒழுங்குபடுத்துவதற்காக இந்தியாவின் முதல் அகர்பத்தி (தூபக் குச்சி) தரநிலையை அறிவித்துள்ளது.
- IS 19412:2025 என பெயரிடப்பட்டுள்ள இந்தத் தரநிலை அகர்பத்திப் பொருட்களுக்கு ஒரு சீரான தேசியக் கட்டமைப்பை வழங்குகிறது.
- இது டிசம்பர் 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படும் 2025 ஆம் ஆண்டு தேசிய நுகர்வோர் தினத்தன்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- இந்தத் தரநிலை தீங்கு விளைவிக்கும் மற்றும் நச்சு இரசாயனங்களைப் பயன்படுத்துவதைத் தடைசெய்து, வீடுகள் மற்றும் பொது இடங்களில் அதன் பாதுகாப்பானப் பயன்பாட்டை உறுதி செய்கிறது.
- இது அகர்பத்தி உற்பத்திக்கான தரம், பாதுகாப்பு, மூலப்பொருள் மற்றும் செயல்திறன் தேவைகளை வகுக்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★